II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. OS.435 of 2018, C/w.20/2019**

Deposition of witness for the Plainiff / PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 04.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sivaprakasam | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

வா.சா.1 மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை –

வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரை படம் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு A – அட்டவணை சொத்து என்ன என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அ.வ.எண்.435/2018 ல் வழக்கு D – அட்டவணை சொத்து விஸ்தீரணம் ஞாபகம் இல்லை. அ.வ.எண்.20/2019 ல் வழக்கு C – அட்டவணை சொத்து விஸ்தீரணம் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துகளின் நீள அகலங்கள் எனக்கு தெரியாது. ஞாபகம் இல்லை. வழக்குரையில் நீள அகலகங்கள் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அ.வ.எண்.435/2018 ல் வழக்கு D – அட்டவணை சொத்தை ராமகிருஷ்ணனும் அவரது வாரிசுகளும் அனுபவித்து வருகிறார்கள். அ.வ.எண்.20/2019 ல் வழக்கு C – அட்டவணை சொத்தை ராமகிருஷ்ணன் மற்றும் அவரது வாரிசுகளும் அனுபவித்து வந்து விற்று விட்டார்கள். எந்த வருடம் விற்றார்கள் என்று வருடம் தெரியாது. 5 முதல் 7 பிரதிவாதிகளை ராமகிருஷ்ணன் வாரிசுகள் என்ற முறையில் சேர்த்துள்ளேன். நான் என்ன பரிகாரங்கள் என்ற கோரியுள்ளேன் என்றால் ராமகிருஷ்ணனின் வாரிசுகள் அவர்கள் பெயரில்

பட்டா வாங்கிவிட்டார்கள் அதனால் இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன். அந்த இடத்தில் தற்போது வீடு, கடைகள் உள்ளன. பிரதிவாதிகள் எந்த முறையில் வழக்கு சொத்தை அனுபவிபத்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன். நான் நாகம்மாள், ரேவதி ஆகியோர் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் இந்த வழக்குகள் நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.